**ஜூலை – 28**

# TNPSC துளிகள்


- பிரபல வரலாற்று ஆசிரியரான இராமச்சந்திர குஹா எழுதிய "காந்தி: உலகத்தை மாற்றிய ஆண்டுகள்" (1914 – 1948) என்ற புத்தகம் பென்குயின் ரேண்டம் ஹவுஸ் இந்தியா என்ற பதிப்பகத்தாரால் வெளியிடப்படவிருக்கிறது.
- உகாண்டாவில் தற்போது காந்தியின் சிலை இருக்கும் பகுதியான ஜின்ஜாவில், காந்தி பாரம்பரிய மையம் அமைக்கப்படும் என்று இந்தியப் பிரதமர் அறிவித்துள்ளார்.
- நிதி ஆயோக்கின் அடல் புத்தாக்கப் பணி மற்றும் Mygov தளம் ஆகியவை இணைந்து '#InnovateIndiaPlatform' – ஐத் தொடங்கியுள்ளது. '#InnovateIndiaPlatform'-ஆனது இந்த இரு தளங்களுக்கிடையேயான கூட்டுச் செயல்பாடாகும். "#InnovateIndiaPlatform" ஆனது நாட்டில் நிகழும் அனைத்து கண்டுபிடிப்புகளின் பொது இணைய வாயிலாக செயல்படும்.
- 18-வது சர்வதேச குழந்தைகளுக்கான திரைப்படத் திருவிழாவினை மேற்கு வங்காள ஆளுநர் கே என் திரிபாதி தொடங்கி வைத்தார். இத்திரைப்படத் திருவிழாவில் 17 நாடுகளைச் சேர்ந்த 36 திரைப்படங்கள் திரையிடப்பட இருக்கின்றன. இத்திரைப்படத் திருவிழாவினை நாட்டின் பழமையான சினிமா சங்கமான சினி சென்ட்ரல் சங்கம் மற்றும் யுனிசெப் ஆகியவை இணைந்து நடத்துகிறது.
- பாட்னா உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியான ராஜேந்திர மேனனை டெல்லி உயர்நீதி மன்ற தலைமை நீதிபதியாக நியமிக்க உச்சநீதிமன்ற கொலீஜியம் மத்திய அரசுக்கு பரிந்துரைத்துள்ளது. டெல்லி உயர்நீதிமன்றத்தின் இடைக்காலத் தலைமை நீதிபதியான கீதா மிட்டலை ஜம்மு காஷ்மீர் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக நியமிக்க கொலீஜியம் மத்திய அரசுக்குப் பரிந்துரைத்துள்ளது.
- 2018 ஆம் ஆண்டு ஜூலை 30 அன்று ஆள் கடத்தலுக்கு எதிரான உலக தினமாக அனுசரிக்கப்படுகிறது. இத்தினத்தைக் குறிக்கும் விதமாக மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகமானது '#Childline1098' என்ற போட்டியைத் தொடங்கியுள்ளது. CHILDLINE என்பது குழந்தைகளுக்குத் தேவையான உதவி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட 24 மணி நேரமும் இயங்கும் இலவச அவசர தொலைபேசிச் சேவையாகும்.

# தேசியச் செய்திகள்

## 'பங்களா' என்று மாநிலத்தின் பெயரை மாற்றத் தீர்மானம்

- மேற்கு வங்காள மாநில சட்ட மன்றமானது மாநிலத்தின் பெயரை 'பங்களா' என்று பெங்காளி, ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய மூன்று மொழிகளில் மாற்றத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.
- இத்தீர்மானம் எப்பொழுது மத்திய உள்துறை அமைச்சகத்தின் அனுமதி பெற்று, பாராளுமன்றம் இது தொடர்பாக சட்டம் இயற்றும் போது இப்பெயர் மாற்றம் அதிகாரப்பூர்வமாக நடைமுறைக்கு வரும்.
- ஆகஸ்ட் 2016 முதல் இத்தீர்மானம் நிலுவையில் உள்ளது. ஆகஸ்ட் 2016-இல் மேற்கு வங்காள சட்டமன்றமானது ஆங்கிலத்தில் 'பெங்கால்' என்றும் வங்க மொழியில்

'பங்களா' என்றும் இந்தியில் 'பங்காள்' என்றும் பெயர் மாற்றத் தீர்மானத்தை நிறைவேற்றியது.




- 2017 ஆம் ஆண்டு வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறு பெயர்கள் இருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, மத்திய அரசு அத்தீர்மானத்தை நிராகரித்தது.
- 2011 ஆம் ஆண்டு மேற்கு வங்காளத்தின் பெயரை 'பஸ்ச்சிம் பங்கோ' என்று மாற்ற அப்போதைய மம்தா பானர்ஜி தலைமையிலான அரசாங்கம் முயற்சி செய்தது. ஆனால் அப்போதைய மத்திய அரசாங்கம் அப்பரிந்துரையை நிராகரித்தது.

## இரு உயர்நிலைக் குழுக்கள்- அரசாங்கம்

- கும்பல் கலவரங்கள் மற்றும் கும்பல் கொலைகள் தொடர்பான நிகழ்வுகளை திறம்பட கையாளுவதற்கான வழிமுறைகள் மற்றும் சட்ட நெறிமுறைகளை வகுக்க மத்திய அரசாங்கம் இரண்டு உயர் நிலைக் குழுக்களை அமைத்திருக்கிறது.
- இந்த இரண்டு குழுக்களில் ஒரு குழுவில் நான்கு உறுப்பினர்கள் உள்ளனர். இக்குழுவிற்கு மத்திய உள்துறை செயலாளர் ராஜிவ் கவ்பா தலைமை வகிப்பார்.
- இந்த நான்கு உறுப்பினர் கொண்ட குழு தனது அறிக்கையினை மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையிலான அமைச்சரவைக் குழுவிற்கு அளிக்கும்.
- அமைச்சரவைக் குழு தனது அறிக்கையினை பிரதம அமைச்சர் நரேந்திர மோடிக்கு சமர்ப்பிக்கும்.
- சமீபத்தில் கும்பல் வன்முறைகள் மற்றும் கும்பல் கொலைகள் தொடர்பாக உச்சநீதி மன்றம் மத்திய அரசுக்கு வழிகாட்டுதல் வழங்கிய பிறகு இக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## பெண்கள் பாராளுமன்றத்தினருக்கான சர்வதேச மாநாடு

- 2018 ஆம் ஆண்டு செப்டம்பரில் பெண்கள் பாராளுமன்றத்தினருக்கான சர்வதேச

மாநாட்டை அயர்லாந்து நடத்தவிருக்கிறது.

- அயர்லாந்து பாராளுமன்றத்திற்குள்ளேயே பெண்கள் பாராளுமன்றத்தினருக்காக பல கட்சிகள் மன்றமான அயர்லாந்து பெண்களின் பாராளுமன்ற கட்சிக் கூட்டம் இம்மாநாட்டை நடத்தவிருக்கிறது. இம்மாநாடு அயர்லாந்தின் டப்லின் கோட்டையில் நடைபெறவிருக்கிறது.
- 'பாராளுமன்ற பெண்களுக்கான சர்வதேச காங்கிரஸ் கட்சிக் கூட்டம்' என்ற இம்மாநாடு 'டப்லின் உறுதி ஆவணத்துடன்' நிறைவு பெறும்.

## பாகிஸ்தானின் முதல் பெண் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி

- பாகிஸ்தான் தலைமை நீதிபதியான சஹிப் நிசர், நீதிபதி தஹீரா சப்தர் –ஐ பலூசிஸ்தான் உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமித்துள்ளார்.



Justice Syeda Tahira Safdar
the first-ever lady to have been appointed as a Civil Judge in Balochistan

- இதன் மூலம் பாகிஸ்தான் உயர்நீதிமன்றத்திற்கு தலைமை நீதிபதியாக ஒரு பெண்ணை நியமித்திருப்பது இதுவே முதன் முறையாகும்.
- பலூசிஸ்தானில் 1982-ல் முதல் பெண் உரிமையியல் நீதிமன்ற நீதிபதியாக பொறுப்பேற்று இவர் வரலாறு படைத்தார்.
- தற்பொழுது நீதிபதி தஹீரா தேசத் துரோக குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷராப் வழக்கை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளில் ஒருவர் ஆவார். முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷராப் 2007 ஆம் ஆண்டு நவம்பர் 3 அன்று நாட்டில் அவசர நிலையை அறிவித்ததற்காக குற்றம் சாட்டப்பட்டார்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்


## பிஜிலி மித்ரா

- செயல்பாடற்ற மின்மாற்றிகள் குறித்து புகார் தெரிவிக்க 'பிஜிலி மித்ரா' என்ற கைபேசி செயலியை இராஜஸ்தான் மாநில அமைச்சர் வசுந்திரா ராஜே அறிமுகப்படுத்தியுள்ளார்.
- புகார் தெரிவித்த ஆறு மணி நேரத்திற்குள் செயல்பாடற்ற மின்மாற்றி மாற்றப்படும்.
- இத்திட்டம் சோதனை முயற்சியாக ஜலவாராவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

### இந்தியாவில் புதிப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியில் முன்னிலை மாநிலம்

- இந்தியாவில் இந்த ஆண்டில் அதிகமான புதுப்பிக்கத்தக்க ஆற்றலை உற்பத்தி செய்யும் மாநிலமாக கர்நாடகா உருவெடுத்துள்ளது. மார்ச் 2018-ன் படி மொத்த நிறுவிய திறனில் 12.3 ஜிகா வாட்ஸ் (GW) ஆற்றலை உற்பத்தி செய்து இந்நிலையை கர்நாடகா மாநிலம் எட்டியுள்ளது.




- இந்த அறிக்கையை 'ஆற்றல் பொருளாதாரம் மற்றும் நிதி பகுப்பாய்வுக்கான நிறுவனம்' (The Institute For Energy Economics and Financial Analysis - IEEFA) தயாரித்துள்ளது.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் தயாரிப்பில் தமிழகம் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- உலகிலேயே பெரிய சூரிய ஒளிப் பூங்காவானது கர்நாடகா மாநிலத்தின் தும்கூர் மாவட்டத்தின் பவகாடாவில் ரூ. 16,500 கோடி முதலீட்டுடன் நிறுவப்பட்டுள்ளது.
- இந்த 2000 மெகா வாட் திறன் கொண்ட பூங்காவின் பெயர் "சக்தி ஸ்தலம்" ஆகும்.

## மாநிலச் செய்திகள்

### முக்கிய மந்திரி கிஷான் ஆயே பட்கோத்திரி சூரிய ஒளித் திட்டம்

- தேசியத் தலைநகரான டெல்லியில் உள்ள விவசாயிகள் கூடுதல் வருவாயிற்காக தங்கள் நிலத்தின் ஒரு பகுதியினை சூரிய ஒளிப் பலகைகள் அமைப்பதற்கு குத்தகைக்கு விடும் திட்டத்திற்கு டெல்லி அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
- முக்கிய மந்திரி கிஷான் ஆயே பட்கோத்திரி சூரிய ஒளித் திட்டத்தின் கீழ்
    - எந்தவொரு விவசாயியும் தனது நிலத்தின் மூன்றில் ஒரு பகுதிக்கு மிகாமல் சூரிய ஒளிப் பலகை அமைப்பதற்காக ஏக்கருக்கு 1 லட்சத்திற்கு தனியார் நிறுவனத்திற்கு ஒப்படைக்கலாம்.
- இந்த விவசாயிகள் முதலீடு செய்யாமல் 1000 யூனிட்கள் இலவச சூரிய ஒளி மின்சாரத்தைப் பெறுவார்கள்.

### நாட்டின் முதலாவது மாநில அரசின் அனைத்து மகளிர் உணவகம்

- இந்தியாவில் முதன் முறையாக கேரள சுற்றுலா மேம்பாட்டு நிறுவனம் பெண்களுக்காக முற்றிலும் பெண்களால் இயங்கும் பொதுத் துறை உணவகத்தை மாநிலத் தலைநகரமான திருவனந்தபுரத்தில் செயல்படுத்தவிருக்கிறது.
- இந்த உணவகத்தின் பெயர் 'ஹோஸ்டஸ்' (Hostess) ஆகும். இது கேரள சுற்றுலா மேம்பாட்டு நிறுவனத்தின் தனித்துவமான திட்டமாகும்.

## பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

### மிஸ் ஆசியா (காது கேளாதவர்) 2018

- மத்தியப் பிரதேசத்தின் திகம்கார்கைச் சேர்ந்த தேஷ்னா ஜெயின் (20), 2018 ஆம் ஆண்டின் காது கேளாதவருக்கான மிஸ் ஆசியா பட்டத்தினையும் 2018 ஆம் ஆண்டின் காது கேளாதவருக்கான மிஸ் சர்வதேச போட்டியில் மூன்றாவது இடத்தையும் பெற்று இரு பட்டங்களையும் வென்றுள்ளார். இப்போட்டி தைவானின் தைபேயில் ஜூலை 6 முதல் ஜூலை 8 வரை நடைபெற்றது.
- மேலும் 20 வயதில் இந்நிகழ்ச்சியில் பங்கு பெற்ற இளம் போட்டியாளர் இவராவார்.
- மிகவும் எதிர்பார்க்கப்படும் சர்வதேச காது கேளாதவருக்கான மிஸ் மற்றும் மிஸ்டர் அலங்கார அணி வகுப்பில் 2009 ம் ஆண்டுக்குப் பிறகு இந்தியா வெல்வது இதுவே முதல்முறையாகும்.
- இதற்கு முன் 2018 ஆம் ஆண்டு இராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் நடைபெற்ற காதுகேளாதவருக்கான மிஸ் இந்தியா போட்டியில் தேஷ்னா வெற்றி பெற்றுள்ளார். இவர் இந்தியாவின் சார்பாக சர்வதேசப் போட்டிகளில் பங்கு பெற்றுள்ளார்.

- - - - - - - - - - - - - - -